# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-14 June - 2024 Issue-01

Price Rs.5-00 Annual Subscription Rs.60/-



## கல்வி ஆண்டில் கடவுளின் ஆசீர்வாதம்




## கல்வி புத்தாண்டு 2024-25

- ♦> நுழைவுத்தேர்வுகள்
- ♦> கலந்தாய்வுகள்
- ♦> நேர்முகத்தேர்வுகள்
- ♦> புதிய உயர்கல்வி
- ♦> புதிய பள்ளி/கல்லூரி
- ♦> புதிய வகுப்பறை/புதிய ஆசிரியர்கள்
- ♦> புதிய மாணவ நண்பர்கள்
- ♦> புதிய பாடத்திட்டம்/புதிய கால-அட்டவணை
- ♦> புதிய கற்றல் சூழ்நிலைகள்
- ♦> புதிய சீருடைகள்/புதிய எழுதுபொருட்கள்
- ♦> புதிய வாகனங்கள்/புதியபயண-திட்டங்கள்
- ♦> புதிய விடுதிகள்/உணவுக்கூடங்கள்
- ♦> முதன் முறையாக பள்ளி/கல்லூரியில்

Entrance exams
Counsellings
Interviews
Higher studies
New school
New college
New classroom
New teachers
New friends
New syllabus
New time table
New uniforms
New stationery
New itineraries
New hostel
New mess hall
First time in school
First time in college
New learning environments



**BLESSED NEW ACADEMIC YEAR 2024-25**

## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டுமாக ஒரு புதிய கல்வியாண்டுக்குள் வந்திருக்கிறோம். இந்த ஆண்டிலும் நம் பிள்ளைகளின் கல்வி சிறப்பாக அமைய ஜெபத்துடன் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். ஆசிரியர்களுக்காகவும் அவர்கள் வழங்கும் தன்னலமற்ற கல்விச்சேவைக் காகவும் கடவுளுக்கு நன்றிசொல்வோம்; ஆசிரியர்களின் நலனுக்காக ஜெபித்துக் கொள்வோம். இந்த கல்வியாண்டில் புதிய உயர் படிப்புகளில் சேர பிரயாசபப்படுகிற வர்களுக்கு அவர்கள் விரும்பிய கோர்ஸ்-களில் அட்மிஷன் கிடைக்க ஜெபித்துக்கொள்வோம்.

இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும்போது நம் நாட்டில் புதிய அரசு பதவியேற்றிருக்கும். தேர்தலுக்காக ஜெபித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம். புதிய அரசு, மக்கள் நலனுக்காக செயல்பட தொடர்ந்து ஜெபித்துக்கொள்வோம்.

'ஜெப-ஜன்னல்' - ஜெப நேரங்கள் (ஜூன் 14, 21, 28), 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம போட்டிகள்' ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (CONTACT-DETAILS, ONLINE வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-162** — **மத்தேயு - 11:29**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| | |
|---|---|
| **சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**<br>நான் சாந்தமாயும் மனத்தாழ்மையாயும் இருக்கிறதால்; என் நுகத்தடியை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும். | **பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**<br>நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். |
| **திருவிவிலியம் (பொது-1995)**<br>நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**<br>நான் சாந்தமும் பணிவும் கொண்டவன்; என் பணிகளை உங்களிடம் ஏற்றுக்கொண்டு, என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு முழுமையான ஓய்வை கண்டுகொள்வீர்கள். |


வசன தியானம்-152

# கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?



Matt-11:29,30

**இயேசுவின் நுகத்தை ஏற்றுக்கொண்டு அவரிடம் கற்றுக்கொள்ளுங்கள்**



மத்-11:29,30

**என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். மத்-11:29,30**

நுகம் என்பது எருதுகளிடம் வேலைவாங்க பயன்படும் ஒரு சாதனம் ஆகும். யூத மக்கள், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதை, தங்கள் மீது ஒரு ‘நுகம்’ இருப்பதாக கருதினார்கள். புதிய ஏற்பாட்டின் காலத்தில், மோசேயின் சட்டத்திற்கும் மேலாக பல்வேறு மத-கலாச்சார ஒழுங்குகளை விதித்ததின் மூலம் பரிசேயர்கள் மக்களின் அந்த சுமையை அதிகரித்தார்கள் (மத்-23:4).

‘நானும் தந்தையாம் கடவுளும் ஒன்றாய் இருக்கிறோம்’ எனச் சொன்ன இயேசு, ‘‘என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்’’ (மத்-11:29மு) என மக்களை அழைத்தார். இயேசுவின் நுகத்தை ஏற்க தங்களை அர்ப்பணிப்பவர்களுக்கு அவர் இளைப்பாறுதலை வாக்களித்தார் (மத்-11:29பி). வாழ்வில் சுமை-சுமந்து சோர்ந்திருப்போர் இயேசுவின் நுகத்தை மேலும் ஏற்கும்போது இளைப்பாறுதல் எப்படி கிடைக்கும்? என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

ஒரு விவசாயி தன் எருதுகள் மீது நுகத்தை வைப்பது போல, இயேசு தமது நுகத்தை நம் மீது வைக்க விரும்புவதே இதன் உட்பொருள். அதன்படி, இயேசுவின் நுகத்தை ஏற்றுக்கொள்வது என்பது, இயேசுவின் கட்டுப்பாட்டுக்குள் நம்மை அர்ப்பணித்து, நம் வாழ்வில் நம்மை வழிநடத்த அவரை அனுமதிப்பது ஆகும். இயேசு தரும் வேலை (அவரது நுகம்) நமது பாரத்தைவிட கடினமாக இருக்காது, என்று அவரே கூறுகிறார் (மத்-11:30).

நாம் அனைவரும் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இயேசுவானவர், பரிசேயர்களைப் போன்றவரல்ல; அவர் மனத்தாழ்மையும், எளிமையுமானவர் (பிலி-2:6-7). அவர் மக்களின் பாரத்தை அதிகரிக்க வரவில்லை மாறாக அவர்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் அளிக்கவே வந்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுவது (தூய-வாழ்வு) மிகவும் கடினம். அதை உணர்த்தவே இயேசு, ‘ஜீவனுக்கு போகிற வழி இடுக்கமும் நெருக்கமுமானது’ (மத்-7:14) என்றார். இக்கருத்தைச் சொல்வதன் மூலம், இயேசு அர்ப்பணிப்பில் (நுகத்தில்) இருந்து நமக்கு விலக்கு வழங்கவில்லை. நுகம் இன்னும் ஒரு நுகம்தான்; ஆனால் இயேசுவை நேசிக்கும் நமக்கு அந்த நுகம் பாரமானதல்ல; அது மிக லேசானது. இதைத்தான் 1யோவா-5:3ல், ‘கற்பனைகளைக் கைக்கொள்வது கடவுளிடம் அன்புகூருவதாம்; கற்பனைகள் பாரமானவைகளல்ல’ என்று அப்போஸ்தலனாகிய பரி.யோவானும் எழுதியுள்ளார்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# கல்வி ஆண்டின் துவக்கத்தில் கடவுளின் விருப்பம்

நீதி-9:10

## GOD'S WILL IN THE BEGINNING OF THE ACADEMIC YEAR

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR
GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES, SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

ஒவ்வொரு ஜுன் மாதமும் கல்வி ஆண்டு தொடங்கிய உடனேயே, பெற்றோராக, ஆசிரியர்களாக, மாணவ-மாணவிகளாக நாம் பரபரப்பாகிவிடுகிறோம். இந்த ஆண்டும் புதிய கல்வியாண்டிற்குள் வந்திருக்கிற நாம் நுழைவுத்தேர்வுகள், கலந்தாய்வுகள், நேர்முகத்தேர்வுகள், புதிய பள்ளிகள், புதிய கல்லூரிகள், புதிய வகுப்பறைகள், புதிய ஆசிரியர்கள், புதிய பாடத்திட்டங்கள், புதிய கால அட்டவணைகள், புதிய சீருடைகள், புதிய மாணவ நண்பர்கள், புதிய கற்றல்-சூழ்நிலைகள் என இயங்கத் தொடங்கியிருக்கிறோம். கிறிஸ்தவ விசுவாசக் கூட்டத்தாராகிய நமக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்து திருமறை என்ன வெளிப்படுத்துகிறது? என்பதை தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

**தம் பிள்ளைகள் கல்வியில் சிறந்திருக்க கடவுள் விரும்புகிறார்:**

கடவுளுக்கு கல்வி முக்கியம் என்பதால், அவருடைய உண்மையுள்ள ஊழியர் களில் பலர் சிறந்த கல்விமான்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. தேவமனித னாகிய மோசே, எகிப்திய அரசு-நீதியரசர்களுக்கு வழங்கிய சிறந்த கல்வியை பெற்றிருந்தார். மோசே வார்த்தைகளிலும் செயலிலும் வல்லமை பெற்றவராகி, எகிப்தியப் பேரரசின் அறிவுசார் இளவரசராக மாறினார் என அப்போஸ்தலர் நடபடிகளின் ஆசிரியர் எழுதுகிறார். ‘‘மோசே எகிப்த்தியருடைய சகல சாஸ்திரங் களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்’’ (அப்-7:22). அதேபோல், ஏசாயா என்ற தீர்க்கனும் உயர்கல்வி கற்று, யூத நாட்டின் அரசியல்-மத ஆலோசகராக யூதாவின் ராஜாக்களான உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களில் சேவை செய்தார் என்பதை 2நாளா-26:22, 2நாளா-32:32, ஏசா-1:1 ஆகிய திருவசனங்களில் நாம் வாசிக்கிறோம். இயேசுவின் சீடராகிய மத்தேயுவும் முன்னதாக வரி வசூலிப்பவராக பணியாற்றி னார். அவர், கணக்கியல், சிவில் சட்டம், உளவியல் ஆகிய கல்வியிலும்

கூடுதலாக கிரேக்க மற்றும் அரமேய மொழிகளிலும் தேர்ந்தவராயிருந்தர். அதேபோல், லூக்கா நற்செய்தியாளர் ஒரு படித்த மருத்துவர் (கொலோ-4:14) மட்டுமல்ல, ஒரு சிறந்த வரலாற்றாசிரியர் (லூக்-1:1-4) ஆகவும் விளங்கினார். அப்போஸ்தலனாகிய பரி. பவுல் அந்நாட்களின் ஒப்பற்ற கல்விமான் ஆகவும், நியாயப்பிரமாணத்தின் அறிவார்ந்த இளம் மாணவராகவும் பிரபலமானவர் (அப்-22:3, கலா-1:14). ஆனால், இவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் உலக கல்வியானது கடவுளின் வழியில் அவர்கள் பெறும் உண்மையான கல்வியின் முன்னோடியாக மட்டுமே இருந்தது. ஆகவே, கடவுளின் வழியில் சரியான அடித்தளம் இல்லையெனில், மிகச்சிறந்த உலகக் கல்விகூட மாயைதான் என்று திருமறை நமக்குக் கற்பிக்கிறது. ‘‘மாயை மாயை, எல்லாம் மாயை’’ ‘‘அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு’’ (பிர-12:8,12பி).

அன்பானவர்களே! நம் பிள்ளைகளும் சிறந்த கல்விமான்களாக உயரவேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். அதே சமயம் அந்த கல்வியானது அவர்களின், தெய்வபயம், கிறிஸ்தவ விசுவாசம், ஆவியின் எளிமை என, அவர்களது வாழ்வுக்கு தூண்டுதலாக அமையவேண்டியது மிக அவசியமாகும்.

**பெற்றோர்-பிள்ளைகள் கீழ்ப்படிந்து கற்றுக்கொள்ள கடவுள் விரும்புகிறார்:**

நாம் கல்வி கற்றுக்கொள்ளும் முன்னதாக, தம்மிடம் தாழ்மையை கற்றுக் கொள்வதை கடவுள் விரும்புகிறார். ‘‘மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா-6:8). நமக்கும் நம் குழந்தைகளுக்கும் தாமே கல்வி கற்பிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ‘‘நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்.’’ (மத்-11:29). அன்பர்களே! கிறிஸ்தவப் பெற்றோராக, விசுவாச குடும்பத்தின் பிள்ளைகளாக கடவுளிடமும், கிறிஸ்து இயேசுவிடமும், தூய ஆவியானவரிடமும் நம்மைத் தாழ்த்தி மனத்தாழ்மையுடன் கற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

**பெற்றோர் தேவபயத்துடன் பிளைகளுக்கு கற்பிக்க கடவுள் விரும்புகிறார்:**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விடாமுயற்சியுடன் சரியான முறையில் பயிற்றுவிக்கும்படி கடவுள் கட்டளையிடுகிறார். ‘‘பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடா திருப்பான்’’ (நீதி-22:6). பெற்றோரிடமிருந்து வரும் அறிவுரைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய பொறுப்பை கடவுள் குழந்தைகளுக்கு நினைவூட்டுகிறார். ‘‘உன்னைப் பெற்ற உன் தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதானவளாக இருக்கும் போது அவளை அசட்டை பண்ணாதே’’ (நீதி-23:22).

அன்பான பெற்றோரே! கிறிஸ்தவப் பெற்றோராக, கடவுள் பயத்துடனும் தெய்வீக முன்மாதிரியுடனும் திருமறையின் வழியிலும் நம் பிள்ளைகளுக்கு கற்பிக்கவும், அவர்களை சிட்சிக்கவும், வழிநடத்தவும் நம்மை அர்ப்பணிப்போம்.

**ஆசிரியர்கள் கடவுளின் குரலாக அசாத்திய திறமையுடன் கற்பிக்க கடவுள் விரும்புகிறார்:**

இந்த 3ம் மில்லினியத்தின் நாட்களில் வீட்டிலேய அதிக கல்வி கற்பிக்கப்படுவது நாம் எதிர்பார்த்த ஒன்றுதான். குழந்தைகள் குறைவான செயல்திறன் கொண்ட பள்ளிகளுக்கு அனுப்பப்படுவது மட்டுப்படுத்தப்பட்டு, அவர்கள் அசாத்திய திறமை, இறை அர்ப்பணிப்பு ஆகிய தகுதிகள் கொண்ட ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகி களின் பராமரிப்பில் இருப்பார்கள். முழு கல்விமுறையும் அசாதாரண பண்புகள் மற்றும் கற்றல் கோட்பாடுகள் நிறைந்ததாய் இருக்கும். இத்தகைய சூழ்நிலை களில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் இறைமக்களாகிய நாம் தூரதரிசனம் நிறைந்தவர்களாகவும் கடவுளின் குரலை ஓங்கி ஒலிப்பவர்களாகவும் விளங்க அழைக்கப்படுகிறோம். அன்புடனும், அக்கரையுடனும், அறிவுத்திறனுடனும் போதிப்பவர்களாக நாம் விளங்கவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். ‘‘உங்கள் கண்கள் உங்கள் போதகர்களைக் காணும். நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.’’ (ஏசா-30:20,21).

மாணவர்கள் வீட்டிலேயே நன்கு பயிற்சி பெறுகிறார்கள் என்பதை அறிந்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் கற்றுத்தந்ததை நிறைவுசெய்வதில் கடவுளின் குரலாக, நம்பிக்கையுடையவர்களாக இருக்க கடவுள் அழைக்கிறார். பெற்றோர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் இருக்கும் நெருங்கிய தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு அமைதியையும் உற்பத்தித்திறனையும் கொண்டு வரும்.

கிறிஸ்துவுக்குள் பிரிமானவர்களே! பெற்றோர்களான நாம், நம் பிள்ளைகளின் கல்விக்காக ஆன்மீக மற்றும் உலகம் சார்ந்த வாழ்க்கையில் வெற்றி வாழ்வு வாழவேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார். மாணவ-மாணவிகள், தங்கள் கல்வியை விடாமுயற்சியுடன் தொடர வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார். சரியான கல்வியைத் தொடர்வது கடவுளுக்கும் மனிதருக்கும் முழுமையாக சேவை செய்ய நம்மை தயார்படுத்துகிறது. மிக முக்கியமாக, எல்லா அறிவுக்கும் எல்லா ஞானத்திற்கும் ஆதாரமாக ஒரு சிறந்த படைப்பாளராக கடவுள் இருக்கி றார் என்பதை ஒப்புக்கொள்வதில்தான் உண்மையான கல்வி தொடங்குகிறது என்பதை நினைவில்கொள்ள கிறிஸ்தவர்களாக நாம் அழைக்கப்படுகிறோம். ‘‘கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தில் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு’’ (நீதி-1:7, 9:10) என்பதை உணர்ந்தவர்களாக கடவுளின் விருப்பதிற்கு இந்தப் புதிய கல்வியாண்டை அர்ப்பணிப்போம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா**

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 85



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

THE PLACE FOR REAL BIBLE Study

Author: Rev.Dr. D. Suresh Rajan

Rev. Dr. சுரேஷ் ராஜன்

## சங்கீதம் – 85

**EPISODE-85**

**முன்னுரை:**

கிறிஸ்துவுக்குள் அன்பான இரட்சிப்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். நமது தேசத்தின் பாராளுமன்ற தேர்தல் முடிந்து, ஒருவேளை இந்த இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும் பொழுது முடிவுகளும் அறிவிக்கப்பட்டிருக்கும். நாம் எல்லோருக்கும் மனதில் தோன்றும் எண்ணமெல்லாம், நமது சிறுபான்மை மக்களுக்கு அவர்கள் அனுபவிக்கும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டும், கடவுளை சுயாதீனத்தோடு வழிபடவும், தங்கள் நம்பிக்கையை பிறரோடு பகிர்ந்துகொள்ளவும் திறந்த வாசல்கள் வேண்டும், தேசமானது பாரபட்சமின்றி அனைத்து மக்களையும் சமமாக பார்க்கும் ஆட்சியாளர்களைக் கண்டடைய வேண்டும் என்பதேயாகும். இதற்காகவே நம்மில் அநேகர் உபவாசத் தோடு இறைவனிடத்தில் வேண்டுதல் செய்துவந்தோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்தான் கோராகின்புத்திரர் எழுதின இந்த பாடலில் காணமுடிகிறது. கடந்தகாலத்தில் கடவுள் செய்த நன்மைகளை குறித்த நினைவுகளுடனும், வரும்காலத்தில் கடவுள் நம்மை வழிநடத்துவார் என்ற எதிர்பார்ப்புடனும் கிறிஸ்துவை பற்றிகொண்டுள்ள நமக்கு இச்சங்கீதம் நமக்கு பெருத்த ஆறுதல்.

**1. கடந்த காலத்தில் கடவுளின் கருணை:** வசனங்கள் 1-3

**முதலாவதாக,** கோராகு வம்சத்தை சேர்ந்த ஒருவர், கடவுள், கடந்த காலத்தில் யாக்கோபின் சிறையிருப்பை திருப்பின அனுபவத்தை, ‘‘கர்த்தாவே, தேசத்தின் மேல் பிரியம்வைத்து யாக்கோபின் சிறையிருப்பை திருப்பினீர்’’ (வச-1) என்று நினைவு கூறுகிறார். அது எந்த அனுபவம் என்று இங்கு சொல்ல முடியாவிட்டாலும் நடந்த சம்பவம் ஒன்றை குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது. நம் வாழ்விலும் பல சிறிய-பெரிய அனுபவங்கள் மூலமாக கடவுள் தந்த விடுதலை வாழ்வை நாம் அனுபவித்திருக்கிறோம். அது சரீர பிரகாரமாக தேவன் செய்த அற்புதமாய் இருக்கலாம் அல்லது நமது ஆவிக்குரிய வாழ்வில் கடவுள் தந்த மாபெரும் விடுதலையாக இருக்கலாம். கடவுளுடைய பிள்ளைகளாகிய நாம் நமது இக்கட்டின் நேரத்தில் வழிநடத்தின ஆண்டவர் இன்றும் என்றும் வழிநடத்த வல்லவர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக,** ‘‘உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை மூடினீர்’’ (வச-2). கடவுளது இறையாசி நம் வாழ்வில் தங்கவேண்டும்

என்றால், பாவமன்னிப்பின் நிச்சயம் நமக்கு வேண்டும். பாவத்தை மன்னிக்க இறைவன் ஒருவருக்கே அதிகாரம் உண்டு. எப்போதெல்லாம் நாம் உடைந்த உள்ளத்தோடு இறைவனிடம் நமது பாவங்களை அறிக்கையிடுகிறோமோ, அப்போதெல்லாம் அவர் நம் பாவங்களை நம்மைவிட்டு முற்றிலும் அகற்றுகிறார் என்பது வேத-சத்தியம் ஆகும். இதற்கு காசு-பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையான மனஸ்தாபத்தோடும் தாழ்ந்த உள்ளத்தோடும் இறைவனிடத்தில் நம்முடைய தவறுகளை அறிக்கையிடும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும். நாம் நல்லவர்கள் என நமக்குநாமே சான்று கொடுத்து ஏமாற்றிக் கொள்ளாமல், நம் இருதயத்தின் கசடுகளை எடுத்துப்போட்டு தூய-உள்ளத்தைத் தர தேவனிடம் வேண்டுதல்செய்யும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும்

**மூன்றாவதாக,** ‘‘உமது கோபத்தின் எரிச்சலைவிட்டு திரும்பினீர்’’ (வச-3) என்று கூறி, பாவமன்னிப்பிற்காக தம்மிடம் வரும் அன்பர்களை கடவுள் மன்னிப்பதோடு, நியாயமாக அவர்களுக்கு வரவேண்டிய தண்டனைகளையும் தள்ளுபடி செய்கி றார். தொடர்ந்து அவர்கள்மேல் கோபமாக இராமல், அவர்களை தமது பிள்ளை களாகவே நேசிக்கிறார் என்ற சத்தியத்தை இங்கு வெளிப்படுத்துகிறார்

அன்பானவர்களே! நீங்களும் உங்கள் வாழ்வில், எதிர்காலத்தைக் குறித்த பயம் மற்றும் பிரச்சனைகளோடு இருப்பீர்களானால், சங்கீதக்காரன் உங்க ளுக்குத் தரும் செய்தி: கடந்த காலத்தில் உங்களை வழிநடத்தின ஆண்டவர், வருங்காலத்திலும் உங்களை காக்கவல்லவர் என்பதுதான். ‘‘இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்’’ (சங்-48:14) என்பதை மறந்துபோகவேண்டாம்

**2. புத்தாக்கத்திற்கான இறைவேண்டல்**:வசனங்கள் 4-7

ஆண்டவருடைய அன்பின் குணாதிசயங்களை அறிந்த சங்கீதக்காரன், அவரிடம் தாழ்மையோடு, ‘எங்கள் மீதுள்ள உமது கோபத்தை தணித்துவிடும்’ என்று வேண்டுதல் செய்வதை பார்க்கிறோம். கூடுதலாக, ‘ஆண்டவரே எங்களை மறுபடியும் உயிர்ப்பியும்’ என்றும் இறைவேண்டல் செய்வதை இங்கு காண்கிறோம். இறைவனுடைய குணாதிசயங்களை அறிந்தவர்களாகிய நாமும், அவருடைய இரக்கத்திற்காக மன்றாடுகிறவர்களாக இருக்கவேண்டும். இக்கட்டு நேரத்தில் மனதில் அலசடி படுகிறவர்களாய் இராமல், ஆண்டவர் நமக்கு இரங்கும்படியாக அவரது இரட்சிப்புக்காக மன்றாட வேண்டும் என்பதை இங்கு நாம் காண்கிறோம்.

அன்புக்குரியோரே! திருமறை நமக்கு கற்பிக்கும் செய்தி: ‘‘தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடு கிறவனோ இரக்கம் பெறுவான்’’ (நீதி-28:13). ஆகவே, நாம் இரட்சிக்கப்படும் படிக்கு கடவுளின் சமூகத்தில் அனுதினமும் தாழ்மையோடு மன்றாடுவது அவசிய மாகும். இரட்சிப்பு என்பது கடந்தகால அனுபவமாக மாத்திரம் இருந்துவிடக் கூடாது. ஒவ்வொரு நாளும் நமது இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்பட வேண்டுமென்று பிலி-2:12 நமக்கு ஆலோசனை சொல்லுகிறது.

**3. இறைவன் அருளும் சமாதானம்**:வசனங்கள் 8-11

உண்மையும் உத்தமுமான இருதயத்தோடு இறைவனிடம் வரும் அனைவருக்கும்,

பாவமன்னிப்பின் நிச்சயம் கிடைக்கும்; மட்டுமல்ல, பாவப்பாரம் நீங்கியதாலே உலகம் தரக்கூடா சமாதானம் அவர்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நிரம்பி வழியும். ஆனால், இந்த பாவமன்னிப்பின் உறுதியும் இறைவன் அருளும் சமாதானமும் நம்மில் நிலைத்திருக்க வேண்டுமென்றால், நாம், நமது பழைய பாவ வாழ்க்கைக்கு திரும்பாதிருத்தல் மிக மிக அவசியம்.

அன்பான இறைமக்களே! பலமுறை இறைவனது ஆசியை பெற்ற நாம், அவரில் நிலைத்திராமல் நமது மதிகேடான, பழைய வழிகளுக்கு திரும்பிவிட்டோம் அல்லவா? இன்றுமுதல் நமது இரட்சிப்பு நிறைவேறவும் கடவுள் தரும் ஒப்பற்ற சமாதானத்தை பெற்றுக்கொள்ளவும் கிறிஸ்துவில் தூயவாழ்வு வாழ்வோம்.

**முடிவுரை:**

‘‘கர்த்தர் நன்மையானதை தருவார் நம் தேசமும் தன் பலனை கொடுக்கும்; நீதி அவருக்கு முன்னாகச் சென்று அவருடைய அடிச்சுவடுகளின் வழியில் நம்மை நிறுத்தும்’’ என்று சங்கீதக்காரன் நிறைவுசெய்கிறார் (வச-12,13). எத்தனை அருமையான வாக்குத்தத்தமிது. ஆண்டவரை அண்டிக்கொண்ட ஒருவரையும் அவர் என்றும் கைவிட்டதில்லை. பிரச்சனைகள் நம் வாழ்வில் வரக்கூடும், உலகமே இடிந்து விழுந்தது போல நமது வாழ்வின் சூழ்நிலைகள் நம்மை பயமுறுத்தக்கூடும், ஆனால், இறைவனின் அன்பை ருசித்த அனைவரும் கர்த்தர் நன்மையானதை தருவார் என்பதில் உறுதியாய் இருந்து கலங்காதிருப்பர். ஆகவே, ஆண்டவர் வழியில் நடப்போம். அவரது அடிச்சுவடுகளை பின்பற்றுவோம். இறைவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களையும் நமதாக்கிக்கொள்வோம். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## Good Tidings Bible-Prints Ministries

### (GOOD SEEDS - கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள். கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

# வேதாகம போட்டி–163 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அன்னாள் ஜெபக்கனி CBE
9) அனி பாய் ஜாண் TIN
10) அரோமா சாத்ராக் TIN
11) ஆர்தர் மாசில்லாமணி CHE
12) அருள்செல்வி VIR
13) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
14) பாலின் பிரியங்கா ஜாண் BAN
15) பெல்சி தங்கராஜ் CHE
16) பெனிட்டா பிராங்க்ளின் CHE
17) பெ.ஃ.ட்டி பிரின்ஸ் CHE
18) பியூலா ஜேசுராஜன் PON
19) பியூலா ராஜசெல்வன் CBE
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரலேகா KAL-AP
23) சந்திரா மேரி விஜயன் BAN
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் ஃ.பின்னி DR CHE
26) சார்லட் டேவிட் CHE
27) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
28) கிறிஸ்துதாஸ் GOP
29) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR TIN
30) கிறிஸ்டி ஞானராஜ் CHE
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
32) கிறிஸ்டி பொன்னுசாமி MDU
33) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
34) டெய்ஸி ஜெபதாஸ் TCY
35) டெய்ஸி சாம் KAL-AP
36) டேனியல் தாமஸ் TIN
37) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
38) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
39) தெபோராள் ஆனந்தமணி TUT
40) டெல்வின் இம்மானுவேல் CBE
41) தேவமணி ஆபிரகாம் TUT
42) தேவநேசம் ராஜாசிங் CHE
43) டோராபாய் CHE
44) எபநேசர் கிரேஸ்லின் சாந்தி TIN
45) எலிசபெத் செல்லத்துரை CHE
46) எமிமாள் மில்டன் CHE
47) எமிமாள் சாமுவேல் (ஜெஸிக்கா) MDU
48) எஸ்தர் D.R. TIN
49) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
50) குளோரி ரவீந்திரன் TIN
51) ஞானம் ஜெபராஜ் TIN
52) ஞானராணி G. TVL
53) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
54) கோல்டா ஜேசுபாதம் MUM
55) கிரேஸ் டேனி TEN
56) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
57) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேனா அன்புரோஸ் CHE
60) கிரேஸியா ஜெயபால் CHE
61) கிரிசெல்டா செய்லர் CHE
62) குணவதி ஜெபமணி CHE
63) ஹெலென் ஜான்சிராணி TIN
64) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
65) ஹெலன் திலக் TUT
66) ஹேமா அஜீத் CHE
67) ஹேமா கேப்ரியேல் BAN
68) ஹெப்சி அசரியா PON
69) ஹெப்சிபா மங்களராஜ் TIN
70) ஹிம்லா ராஜகுமாரி CHE
71) இளவரசி ஜோபிதா CBE
72) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
73) இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN
74) ஜமீலா செல்வராஜ் CHE
75) ஜேன் தர்மராஜ் MAR
76) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI

77) ஜான்ஸி சந்தியா MAR TIN
78) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
79) ஜெபா கோல்டா TIN
80) ஜெபா ஜெயராஜ் AVD
81) ஜெபக்குட்டி மோசஸ் TIN
82) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
83) ஜெபசீலி கிளிண்டன் CHE
84) ஜெபா சீனி MAR TIN
85) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
86) ஜெமீலா நிக்ஸன் CHE
87) ஜெனிலா CHE
88) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
89) ஜெனித்தா செல்வின் TIN
90) ஜெரின் ஸ்டீபன் MUM
91) ஜெஸி செல்லதுரை CBE
92) ஜெஸி ஜெயக்குமார் TIN
93) ஜெஸிதா அகஸ்டின் KUR-AP
94) ஜெயா ஆல்பர்ட் KUM
95) ஜோனா ஸ்டீபன் AVD
96) ஜோஸ்பின் ஜெஸி CHE
97) ஜாய்ஸ் பாண்டியன் CHE
98) ஜூலியட் ஜெபா CHE
99) ஜூலியட் ஜெயக்குமார் TIN
1000) கலா கிருபாகரன் TIN
101) கலையரசி செல்வராஜ் CHE
102) கஸ்தூரி எலியாஸ் TIN
103) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
104) லதா மைக்கேல்ராஜ் CHE
105) லீலா ஜோஸப் CBE
106) லீனா எலிசபெத் CKA-TPT
107) லில்லி ஜாண்ஸன் CHE
108) லிஸி டென்சிங் TIN
109) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
110) மல்லிகா V. CHE
111) மணிமேகலை ஜெயக்குமார் TIN
112) மரிய பாப்பா CHE
113) மரியாள் ஜே.எஸ். TUT
114) மேபல் கிறிஸ்டியன் CHE
115) மெஜிலா ஜோஷ்வா TUT
116) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
117) மெரிட்டா ஜெயபாலன் TCY
118) மியூரியல் புஷ்பராஜ் CHE
119) நகோமி நிர்மலா CHE
120) நதியா லாரன்ஸ் TVR
121) நிக்ஸன் எவர்பிரைட் TIN
122) ஆலிவ் ஜெயபாலன் CBE
123) பாக்யபாய் ஆரோன் TIN
124) பமீலா எட்வின் KAN
125) பெர்சி பால் பொன்சிங் TUT
126) பிங்க்லின் சந்தோஷ் CHE
127) பிரேமா பூபாலன் AVD
128) பிரேமா ஜானி TEN
129) பிரேமா ஸ்டாலின் CHE
130) பிரேம்குமாரி ஜெய்சிங் CHE
131) பிரின்ஸ் தயாநிதி CHE
132) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
133) பிரிசில்லா தாஸ் CHE
134) பிரிஸ்கில்லாள் சசி CBE
135) பிரியா ராஜ்குமார் CHE
136) ரேச்சல் ஈஸ்டர் VEL
137) ரேச்சல் கனகராஜ் CBE
138) ராஜபிரமீளா TPT
139) ராஜ்மேரி சார்லஸ் KER
140) ரமோலா அதிசயராஜ் TIN
141) ராணி ஃபுளோரா APM-TEN
142) ராணி பிரபாகர் TIN
143) ராணி சாமுவேல்ராஜ் CHE
144) ரோஸ்லின் மார்கிரெட் CHE
145) ரூபவதி நோபிள் TIN
146) ரூத் HAPP-TCY
147) ரூத் ஜாண்ஸன் TIN
148) சலோமி மனோகர் DR. CHE
149) சாமுவேல் டேவிட் TPT
150) சாரா பாலசிங் MDU
151) சரோஜினி எலிசபெத் CHE
152) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
153) செல்வராஜ் K. CBE
154) செல்வராணி ஆல்பர்ட் CHE
155) செல்வி அமிர்தராஜ் TVR
156) ஷாலி எடிசன் CHE

வேதாகம போட்டி–163 சரியான பதிலளித்தோர்– 11ம் பக்கத் தொடர்ச்சி

157) சாந்தி ஆல்பர்ட் PCT
158) சாந்தி ஜெயசீலன் CHE
159) சாந்தி ரோஸ் CBE
160) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
161) ஷேபா சந்தோஷ் CHE
162) ஷீபா சாம்ஸன் CHE
163) ஷீலா இஸ்ரேல் TCY
164) ஷெரீன் ஜெபராஜ் PNR-TVL
165) சில்வியா ∴பின்னி DR. CHE
166) சவுந்தரம் சாலமோன் CHE
167) ஸ்டெல்லா டேவிட் TUT
168) ஸ்டெல்லா கனகராஜ் CHE
169) சுகிர்தா ஆல்வின் CHE
170) சுகிர்தா சின்னதுரை TIN
171) சுஜாதா சாமுவேல் CHE
172) சுமித்ரா B. CHE
173) சுசீலா தியோடர் TCY
174) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
175) தனசீலி ஞானராஜ் CHE
176) தாரா மாணிக்கம் CHE
177) தெல்மா ஸ்டேன்லி MDU
178) உமா குளோரி CHE
179) வனஜா ஹெர்பர்ட் TIN
180) வசந்தா அன்பன் TIN
181) வசந்தா சந்திரசேகர் CBE
182) வசந்தா துரைராஜ் OFT-TCY
183) வசந்தி கருணாகரன் CHE
184) வசந்தி வாசன் CHE
185) விஜயராணி A. CHE
186) விஜி டேனியல் CHE
187) விமலா ஜெயக்குமார் TUT
188) விண்ணரசி ரோஸ் CHE
189) வினோலியா ஜேம்ஸ் TUT
190) வினோலியா வில்சன் VAN
191) வைலட் கிறிஸ்டோபர் TIN

## வேதாகமப் போட்டி-162 சரியான பதிலளித்தோர்

1) சிந்தி ஜோஷ்வா
2) ஜெஸி ஜெயக்குமார்
3) மேபல் கிறிஸ்டியன்
4) மணிமேகலை ஜெயகுமார்
5) நதியா லாரன்ஸ்
6) ரேச்சல் ஈஸ்டர்
7) செல்வஅமுதா ஜார்ஜ்
8) ஷர்மிளா செல்வராஜ்
9) ஷேபா சந்தோஷ்
10) ஷீலா PAN-TVR
11) வைலட் சைரஸ்

## வேதாகம போட்டி–163 (2கொரிந்தியர்) சரியான விடைகள்

1. தன்னைத்தான் புகழ்கிறவன் - கர்த்தரால் புகழப்படுபவன் 2கொரி:-10:18
2. அரேத்தா-சேனை-தலைவன் 2கொரி:-11:32
3. தேவ. வாக்குத்தத்தங்கள் 2கொரி:-1:20
4. நிர்வாணிகளாய் 2கொரி:-5:3
5. இரட்.ஏதுவா.மனந்திரும்புதல் 2கொரி:-7:10
6. காணப்படுகிறவைகள் - காணப்படாதவைகள் 2கொரி:-4:18
7. யூதர்களால் 2கொரி:-11:24
8. ஆம் என்றும் அல்ல என்றும் 2கொரி:-1:19
9. தவறு - 2கொரி:-5:6
10. சரி - 2கொரி:-3:17
11. சரி - 2கொரி:-6:2
12. சரி - 2கொரி:-6:16
13. இ - ஊன்றக்கட்ட 2கொரி:-13:10
14. இ - இரண்டு-மூன்று 2கொரி:-13:1
15. ஆ - பொக்கிஷங்களை 2கொரி:-12:14
16. ஈ - கர்த்தரை 2கொரி:-10:17
17. மோசங்கள் 2கொரி:-11:26
18. முக்காடு 2கொரி:-3:13-16
19. கைவேலை அல்லாத நித்திய வீடு 2கொரி:-5:1,2
20. தேவனுக்கேற்ற துக்கம் 2கொரி:-7:9-11

# வேதாகம போட்டி-164

வேத–பகுதி: கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் நிருபங்கள்

வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

1. கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தது யார்?

2. யாரைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் காணவில்லை என்கிறார் பவுல்?

3. விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் - இவர்கள் யார்?

4. எவற்றில் மரித்தவர்களாயிருந்த நம்மை தேவன் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்?

5. சிலுவைக்கு பகைஞரான அநேகருடைய தேவன் யார்? அவர்களின் மகிமை என்ன?

6. 'இவள் சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்' - யார் இவர்?

7. எந்த தேசத்தில் கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு பவுல் முகமறியாதவராயிருந்தார்?

8. தேவனுக்கு பயந்து கபடமில்லாத இதயத்தோடே ஊழியஞ்செய்யவேண்டும். யார்?

9. 'பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்' - **சரியா தவறா**?

10. 'பிசாசுக்கு பதில் கொடாமலும் இருங்கள்' - **சரியா தவறா**?

11. 'கிறிஸ்து சபையிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது' - **சரியா தவறா**?

12. 'நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்' - **சரியா தவறா**?

13. தேவன் நம்மை '**இவர்**' மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்:
அ) பிர. ஆசாரியன் ஆ) இயேசுகிறிஸ்து இ) பரி.ஆவியானவர் ஈ) மோசே

14. '**இதில்**' உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக:
அ) சத்தியத்தில் ஆ) விசுவாசத்தில் இ) நம்பிக்கையில் ஈ) அன்பில்

15. மனுஷருக்கென ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென '**இவ்வாறு**' ஊழியஞ்செய்யுங்கள்:
அ) மனசாட்சியோடு ஆ) நல்மனதோடு இ) உற்சாகத்தோடு ஈ) சோர்வின்றி

16. நீதியானது நியாயப்பிரமாணத்தினால் வருமானால், '**இது**' வீணாயிருக்குமே:
அ) கிறிஸ்து வந்தது ஆ) விசுவாசம் இ) சுவிசேஷம் (ஈ) கிறிஸ்து மரித்தது

17. ஆதித் தகப்பனுக்கு அடிமை மகனை பெற்ற அன்னை! ஆவிக்குறிய தகப்பனுக்கு மாம்ச மகனை ஈன்ற அரபி! விசுவாசத் தகப்பனுக்கு வீட்டிலே பிள்ளை பெற்ற விதேசி! **யார் இவள்? யார் இவள்?**

18. நற்செய்தி கேட்டதும் முத்திரை! வசனத்தை கேட்டதும் முத்திரை! விசுவாசம் கொண்டதும் முத்திரை! இவரால் முத்திரை, இவருக்குள் முத்திரை! **இவர் யார்?**

19. பதினேழு இவை பதினேழு! 'பளிச்' என தெரியும் இவை பதினேழு! பழங்களுக்கு எதிரான இவை பதினேழு! பரலோகத்தை தடுக்கும் இவை பதினேழு! **இவை என்ன?**

20. கிருபையால் உண்டானது இது, கிரியையால் அல்ல! விசுவாசத்தால் உண்டானது இது, உங்கள் விருப்பத்தால் அல்ல! கடவுளின் பரிசு இது, கர்வம் கொள்ள அல்ல! **இது என்ன?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-04-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ்,
எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-61

பாகம்-61



தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார். சங்கீதம்–75:7

But God is the judge: He putteth down one, and setteth up another. Psalm-75:7

SIS.C. ANGEL

JUDGE SHOVPHAT

## நியாயாதிபதி

'ஷாவ்ஃபட்'

பராக்கிரமத்தினால் சிறைப்பட்டவர்களையும் பெலவந்தரால் கொள்ளையிடப்பட்ட வர்களையும் விடுதலையாக்குகிற நீதியுள்ள, செம்மையானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளக்கு ஜுன் மாத யாக்கோபுடைய வல்லவரின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**சங்-7:11** தேவன் நீதியுள்ள நியாயாதிபதி.

**சங்-94:2** பூமியின் நியாயாதிபதியே! நீர் எழுந்து இந்திய தேசத்தின் ஒருமைப் பாட்டிற்கும், இயற்கை வளங்களுக்கும், சமாதானத்துக்கும், ஆசீர்வாதத்துக்கும் எதிரான பெருமைக்காரருக்குப் பதிலளிக்கிற மாதமாகவும் காலங்களாகவும் இவ்வருடம் இருக்க ஜெபிக்கிறோம்.

**சங்-135:14** 'கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர் மேல் பரிதாபப்படுவார்' என்ற ஜீவனுள்ள வார்த்தை இந்தியாவில் நிறைவேறுவதாக.

**ஏசா-26:9** இந்திய பிரதமர் தேர்தலில் உமது முடிவைப் பெற எங்கள் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. அதிகாலையில் உம்மை எங்கள் ஆவி தேடுகிறது. உமது நியாயத்தீர்ப்புகள் தேர்தல் முடிவுகளில் நடக்கும்போது 144கோடி மக்கள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.

**யோபு-36:17** உமக்கு ஆகாதவன் மேல் வரும் நியாயத்தீர்ப்பு நிறைவேறுவதாக. நியாயமும் நீதியும் தேவபிள்ளைகளுக்கு ஆதரவாக மாறுவதாக.

**ஜெபம்:** நீதியோடும் நிதானத்தோடும் நியாயம் செய்கிற நியாயாதிபதியே! உம்மைத் துதிக்கிறோம். எங்களுடைய கடினமான காரியங்களையெல்லாம் (உபா-1:16,17) உம்மிடத்தில் கொண்டுவருகிறோம். எங்களுக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில், பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-157

# முதலிடம் கர்த்தருக்கே

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

ஸ்காட்லாந்து தேசத்திலே ஹெரால்டு என்னும் தேவபக்தியுள்ள வாலிபன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன், வேதவசனங்களைக் கைக்கொண்டு நடப்பவன். அவன் நன்கு படித்து, மருத்துவ படிப்பை முடித்து ஏழை எளியவர்களுக்கு இலவசமாக மருத்துவ பணியாற்றும் ஒரு டாக்டராக பணிசெய்து வந்தான். ஹெரால்டு, அனுதினமும் மருத்துமனைக்கு செல்லும் வழியில ஒரு சர்ச்சுக்கு சென்று இயேசுவை தரிசித்துச் செல்வது வழக்கம். இவ்வாறு மருத்துவ சேவை செய்துவந்த டாக்டர். ஹெரால்டு ஒருநாள் காரில் சென்றுகொண்டிருந்தபோது விபத்தில் சிக்கிக்கொண்டார். விபத்தில் அவரது வலதுகால் சேதமடைந்தது. இதற்காக அவர் 3மாதம் தீவிர சிகிச்சை எடுத்துக்கொண்ட நாட்களில், இயேசுவை தரிசிக்க செல்லமுடியாத நிலையில் இயேசு வானவர் தாமே ஹெரால்டின் ஆன்மீக தாகத்தை அறிந்தவராக அனுதினமும் ஹொரால்டின் படுக்கையின் முன் காட்சியளித்து தன் அன்பை வெளிப்படுத்திவந்தார். இவ்வாறு சிகிச்சை பெற்றுவந்த நாட்களில் இயேசுவின் தரிசனத்தை பெற்றுவந்த ஹெரால்டு, தான் காலூன்றி நின்று நடக்க பெலன் வந்தபோது தன் அருகில் சிகிச்சை பெற்றுவந்த பிற நோயாளிகளை மறந்துவிடாமல் அவர்களுக்கும் இயேசுவின் அன்பை கூறி அவர்களும் இயேசுவை அறிந்துகொள்ளவும், அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் உதவி செய்யும் மகத்தான பணியை மேற்கொண்டார்.

3மாத சிகிச்சையின் பயனாக பூரண சுகம் பெற்று, இயேசுவுக்கு நன்றி செலுத்தி தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்ற டாக்டர் ஹெரால்டு, இன்னும் சிறப்பாக தன் மருத்துவப் பணியை தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்தார்.

பிரியமானவர்களே! நம் வாழ்விகூட நாம் ஹெரால்டைப்போல் அனுதினமும் இயேசு இரட்சகரை தரிசித்து அவரிடம் நம்மை அர்ப்பணித்து நம்முடைய பணிகளை செய்யும்போது அவர் நம்மை அதிசயமாய் வழிநடத்துவதோடு மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும் கருவிகளாகவும் நம்மை பயன்படுத்துவார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஹெரால்டின் முன்மாதிரிப்படி நம் நமது எல்லா காரியங்களையும் ஆண்டவரிடம் ஒப்படைக்கும்போது நமது துன்பங்கள், தொல்லைகள், பிரச்சனைகள் எல்லாவற்றினின்றும் நம்மை மீட்க இயேசு சுவாமி போதுமானவராக இருக்கிறார். ஹெரால்டைப்போல நாமும் இயேசுவை தரிசித்து, இயேசுவின் அருளைப்பெற்று, இயேசுவை அறிவித்து, அநேகம் ஆயிரம் மக்களை தேவனுடைய மந்தையில் சேர்த்து மேலான ஆசீர்வாதங்களை பெற்று இன்புற்று வாழ அன்புடன் வாழ்த்துகிறேன்.

வேதம் இவ்வாறு கூறுகிறது:

கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரை தேடுங்கள். ஏசாயா 55:6
கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. சங் 34:10
கர்த்தர் என்றென்றைக்கும் தம் ஜனத்தை சுற்றிலும் இருக்கிறார். சங் 125:2
முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள்;
அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். மத் 6:33



சகோ. அசரியா

## இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 23

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-5 பகுதி-3

**தொகுதி-5:**

**ஜெசுவைட்ஸ்"ம் இந்திய திருச்சபையும்**

**பகுதி-3: கோவாவும் விரிவாக்கப் பணிகளும்**

பிரான்சிஸ் சேவியர் கோரமண்டல் கடற்கரையில் ஒரு வருடம் கழித்தபின் கோவாவுக்கு திரும்பிச் சென்றார். அவருக்குப்பின் கல்வி குறைபாடுடைய மன்சில்ஹாஸ், பரவாஸ் மத்தியில் பணியாற்ற சம்மதித்திருந்தாலும், கோரமண்டல் கடற்கரைக்கு வரவில்லை. பதவி மற்றும் ஆளுமை வகிக்கும் அளவுக்கு லத்தீன் மொழியில் மன்சில்ஹாஸ் தகுதி பெறவில்லை என்று அங்கு வந்த நிக்கோலஸ் லான்சிலோட்டோ என்ற ஜேசுயிட் குறிப்பிடுகிறார்.

கி.பி.1544 பிப்ரவரியில், கோவா மற்றும் கொச்சியில் சிலகாலம் தங்கியபின், சேவியர் ஒரு வருடம் பரவர் இனத்துடன் கடுமையான இடையூறுகளின் மத்தியில் தங்க மறுபடியும் கடற்கரைக்குத் திரும்பினார். தேவாலயத்தில் இரண்டு பாதிரியார் களை நியமித்ததன் மூலம் சபை ஊழிய அணி அதிகரிக்கப்பட்டது. அவர்களில் பிரான்சிஸ் கோயல்ஹோ ஒரு இந்தியர். இருப்பினும் பரவாஸ் அமைப்பிற்கு எதிராக ஜான் ஆர்ட்டியாகா என்னும் ஒரு சாதாரண மனிதர் செயல்பட்டார். அவரது செயல்பாடுகள் சிரமங்களையும் சிக்கல்களையும் ஏற்படுத்தியது. ஆனாலும், சேவியர், செப். 1545வரை, அங்கு தங்கியிருந்து, பின்னர் மலாக்கா சென்றார். சிறிய மேத்யூ, ஏற்கனவே சேவியருக்கு உதவிய ஒரு பிரகாசமான பரவா சிறுவன். அவன், சந்தேகத்திற்கு இடமின்றி அமெச்சூர் மொழிபெயர்ப் பாளருக்கு சமமாக பணியாற்ற போதுமான போர்த்துகீசியம் தெந்தவன். பின்னர் சேவியர், தமது பணி-மையமாக புன்னைக்காயலை தேர்ந்தெடுத்தார். இது தூத்துக்குடியை விட குறைவான போர்ச்சுகீசியர் கொண்ட இடம். பிரான்சிஸ் சேவியருக்கு அன்டோனியோ என்று பெயரிடப்பட்ட ஒரு சமையல்காரர் இருந்தார். மேலும் அன்டோனியோ என்று அழைக்கப்பட்ட ஒரு பரவாஸ் இன உதவியாளரும்

இருந்தார். கிராமத்தலைவர்கள், ஒழுங்கற்றவர்களுக்கு ஒழுக்கத்தை போதித்தனர்.

விஜயநகர மன்னரின் படைகள், கேப் கொமோரின் வரை ஆதிக்கம் செலுத்தியது. படகாக்கள் என்போர் வடுக்கரர், வடநாட்டினர், அவர்கள் எங்கு சென்றாலும் தங்களுடன் குழப்பத்தை எடுத்துச் சென்றார்கள். கி.பி.1544ல், படகாக்கள் தொலைதூர தென்பகுதியான், கேப்-கொமோரின் வரை வந்து தாக்குதல் தொடுத் தனர். போர்த்துகீசியர்களின் வெறுப்பும் மற்றும் பரவாக்களை ஒடுக்குவதற்கான அவர்களின் முயற்சியும் அதிகரித்ததால் பரவாஸ் மக்கள் நிலைகுலைந்தனர்.

அடிமைகள் என்ற பெயரில் சில கிறிஸ்தவர்களை சிறைபிடித்த போர்த்துகீசியர், மற்ற பரவாஸ் மக்களை கடுமையாக துன்புறுத்தினர். மக்கள் ‘கேப்’பிலிருந்து வெகு தொலைவில் உள்ள பாறைத்-தீவுகளில் தஞ்சம் அடைந்தனர். சேவியர் அவர்களின் உதவிக்கு செல்ல வேண்டுமென விரும்பினார்; ஆனால், தென்மேற்கு காற்று வீசிக்கொண்டிருந்தால் அவரது முயற்சிகள் பலனளிக்கவில்லை.

‘‘வடுக்கரிடமிருந்து தப்பி ஓடிய கிறிஸ்தவர்களுக்கு உதவ 20-தோணிகளுடன் சென்றேன்; அப்போது நான் பட்ட பாடுகளை ஆண்டவரே அறிவார். கேப்-கொமோரினில் உள்ள பாறைத்-தீவுகளில் தஞ்சம் அடைந்த பரவாஸ் மக்கள், பசி மற்றும் தாகத்தால் இறந்து கொண்டிருந்தனர். காற்று மிகவும் எதிர்மாறாக இருந்தது, துடுப்புகளால் அல்லது கயிறுகளால் எங்களால் அவர்களை அடைய முடியவில்லை. காற்று குறையும் போது, நான் மீண்டும் திரும்பி வந்து என்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்தேன்.’’ என்று சேவியர் குறிப்பிடுகிறார்.

இங்கு கிறிஸ்தவர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாய் இருந்தது. தெற்கில் மன்னர்கள், வடக்கே விஜயநகரின் கீழ் இருந்த நாயக்கர், பிரபுக்கள், ஆட்சியாளர்கள் என அனைவரும் தொடர்ந்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். பரவாஸ் இன மக்களுக்கு ஒருவரும் உதவவில்லை. கேப்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள பெரியதலை கிராமத்தில். இருந்த திருவடி என்ற ஒரு நல்ல மனிதர், தன் அன்பான மருமகனின் அலுவலகங்கள் மூலம் கிறிஸ்தவர்களுக்கு நிவாரணம் வழங்கினார். ஆளும் வர்க்கத்தால், கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்படுவதைக் கேள்விப்பட் திருவடி அவர்கள், உடனடியாக அவர்களுக்கு உணவு மற்றும் பிற தேவைகளை அனுப்பினார். மேலும் அனைத்து கிறிஸ்தவர் களையும் பரிவுடன் நடத்த கேட்டுக்கொண்டார். பிற்பாடு அவரது பகுதியில் தேவாலயங்கள், கட்டுவதற்காக திருவடி 2,000 பணம் கொடுத்தார்.

சேவியர் கி.பி.1545ம் ஆண்டு ஜனவரி 27ல் ஒரு கடிதத்தில், தாம் ஒரு மாதத்தில் 10,000க்கும் அதிகமான பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்த விவரத்தையும் தருகிறார். கிழக்கு மலாக்காவிற்கு விஜயம் செய்ய சேவியர் தீர்மானித்திருந்தார்,

மலாக்காவிற்கு புறப்படுவதற்கு முன் அவர் மன்சில்ஹாஸுக்கு நீண்ட கடிதம் ஒன்றில், ‘‘நான் அங்கு இருந்தபோது செய்ததைப் போலவே கிறிஸ்தவர்களை எல்லா இடத்துக்கும் சென்று சந்தித்து ஆலோசனை, ஊக்கம் மற்றும் பணம் கொடுப்பதை முதல் கடமையாகக் கொள்ளவேண்டும். புதிய கிறிஸ்தவர்கள் மீது கவனம் செலுத்துங்கள். ஒரே இடத்தில் நிலையாகத் தங்கியிராமல், புதிய இடங்களுக்கு நகர்ந்து செல்லுங்கள். இந்த முறை மலபார் மையத்திலிருந்து அனுப்பப்டுகிற பாதிரியார்கள் மீது விசேஷித்த கவனம் செலுத்தி, அவர்கள்

தவறு செய்தால் கண்டிக்கவும்; தவறு செய்தவர்களை தண்டிக்காமல் இருப்பது பெரும் பாவம்'' என்று எழுதினார். கி.பி.1545 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை சேவியர், செயின்ட் தாமஸ் மவுண்டில் போர்த்துகீசியரிடையே போதகராக சிறப்பாகப் பணியாற்றினார். அதே ஆண்டில் செப்டம்பர் மாதம் மலாக்காவிற்கு சென்ற அவர் கி.பி.1548ம் ஆண்டு ஜனவரி 13ம் தேதி மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பினார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூன் - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 14-06-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 21-06-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 28-06-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**

MOBILE:
9962924900/7871676100
WHATSAPP:
9789914463/7871676100
E-MAIL:
sjddharmaraja@gmail.com
POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME:
DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO:
601071548.
BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE:
IDIB000N122.
BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER:
9789914463
QR CODE
FOR SCANNING
OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D
UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, 1st floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்தியாவில் பதவியேற்றுள்ள புதிய அரசு மக்கள் நலனுக்காக செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பி.ஹெச்.டி வரையில் புதிய கோர்ஸ் அல்லது புதிய வகுப்புகளுக்கு சென்றிருக்கிற நம் பிள்ளைகளுக்கு இந்த கல்வியாண்டில் நல்ல ஆரோக்கியமும் சிறந்த ஞானமும் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி திருமதி. ஜெயசீலி தர்மராஜா, திருமதி. வி. மல்லிகா, REV. தர்மராஜா, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR. ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு. ஆர். வில்சன், திருமதி. கிரேஸ் திவ்யா, திரு. ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. வனஜா ஹெர்பர்ட் திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட் ஆகியோருக்காக அவர்களின் குடும்பத்தாருக்காக..

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th June 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. இங்கிலாந்து நாட்டில் நடைபெறும் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி விரைவில் நிறைவடைய உள்ளதால், வரும் ஜூலை 4ம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறும் என அந்த நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளார்.

2. அதானி குழுமத்தின் முந்த்ரா (குஜராத்) துறைமுகத்தில் 400மீட்டர் நீளம் கொண்ட பிரம்மாண்ட சரக்கு கப்பலான 'எம்எஸ்சி அனா' நங்கூரமிட்டு உள்ளது. இது இந்தியாவுக்கு இதுவரை வந்த சரக்கு கப்பல்களில் மிகப்பெரியது ஆகும்.

3. தமிழ்நாட்டில் புதிய கல்வியாண்டில் பள்ளி செல்லும் மாணவர்கள், புதிய பஸ்-பாஸ் வழங்கப்படும்வரை, சீருடையில் வந்து பழைய பஸ்பாஸ் மூலம் அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம் என தமிழக அரசு அறிவிப்பு.

4. இந்திய காப்பீடு ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய விதிகளின்படி காப்பீடு பெறுவதற்கான வயது வரம்பு தளர்த்தப்பட்டு, ஜூன்-2024 முதல் 65வயதுக்கு மேற்பட்டோருக்கும் மருத்துவ காப்பீடு வசதி வழங்கப்படுகிறது.

5. தாய்லாந்தில் (பாங்காக்) நடந்த சர்வதேச கால்பந்து சங்கத்தின் (பிபா) வாக்கெடுப்பில் வென்று, வரும் 2027ம் ஆண்டுக்கான 10-வது பெண்கள் உலகக்கோப்பை கால்பந்து போட்டியை நடத்தும் உரிமையைப் பெற்றது பிரேசில்.

Posted on: 10th June 2024

To

## கல்வி புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**HAPPY ACADEMIC YEAR**

இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப வீரர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், வேதாகம போட்டிகளில் பங்கு பெறுவோர், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள் ஆகிய உங்களில் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைத்து அன்பர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **கல்வி புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

**June 2024 to April 2025**

If undelivered Please return to:
REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.